## நீதித்துறைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு!

# நீதியரசர் பொன் பாஸ்கரன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஜீன்.1-

நீதியரசர் பொன். பாஸ்கரன் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

நீதியரசர் பொன். பாஸ்கரன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

தஞ்சை மண்ணின் மைந்தரான நீதியரசர் பொன் பாஸ்கரன் அவர்கள், தலைவர் கலைஞர் மீது பெருமதிப்பும், பேரன்பும் கொண்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பல்வேறு ஆணையங்களின் பொறுப்புகளிலும் நியமிக்கப்பட்டு சிறப்பாகச் செயலாற்றி வந்தவர்.

நீதித்துறையின் தகைமை சான்ற ஆளுமைகளில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

அவரது மறைவு நீதித்துறைக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். நீதியரசர் திரு. பொன். பாஸ்கரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நீதித்துறையைச் சேர்ந்த நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## திருப்பூர் கிழக்கு மாவட்டம்

# தாராபுரம் கிழக்கு - தாராபுரம் மேற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் ஒன்றியகழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருப்பூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள தாராபுரம் ஒன்றியம் இரண்டு ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாகஅமையும்.

**தாராபுரம் கிழக்கு ஒன்றியம் :**1. நஞ்சியம்பாளையம், 2. வீராட்சி மங்கலம், 3. மாம்பாடி, 4. நாதம்பாளையம், 5. நல்லாம்பாளையம், 6. மணக்கடவு, 7. கொங்கூர், 8. பொம்மநல்லூர், 9. அலங்கியம் ஆகிய 9 ஊராட்சிகள் மற்றும் கொளத்துப்பாளையம் பேரூர்.

**தாராபுரம் மேற்கு ஒன்றியம் :**1. பொன்னாபுரம், 2. பொட்டிக்காம்பாளையம், 3. கோவிந்தாபுரம், 4. சின்னப்புத்தூர், 5. தொப்பம்பட்டி, 6. கவுண்டச்சிபுதூர், 7. தளவாய் பட்டிணம் ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் சின்னக்காம்பாளையம் பேரூராட்சி.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற தாராபுரம் கிழக்கு மற்றும் தாராபுரம் மேற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தாராபுரம் கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **கே.கே.துரைச்சாமி** திருப்பூர் மாவட்டம்.

**தாராபுரம் மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எஸ்.வி.செந்தில்குமார்** திருப்பூர் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## ஈரோடு தெற்கு மாவட்ட

# இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

**அமைச்சர் சு.முத்துசாமி சிறப்புரை!**

ஈரோடு,ஜுன். 1-

ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய - பகுதி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் 30.05.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி கலந்து கொண்டு, இளைஞர் அணி நிர்வாகிகள் ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.






ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் வரவேற்புரையாற்றினார். கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் கே.இ.பிரகாஷ் எம்.பி., பி.எஸ்.சீனிவாசன், மாநகர கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர். இந்நிகழ்வில், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழகச் செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், சமூக வலைத்தளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து இளமாறன் அவர்களும் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர். ஈரோடு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கே.டி. சேந்தபுகழன் நன்றியுரை ஆற்றினார். ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

# சேரன்மகாதேவி கிழக்கு - இராதாபுரம் கிழக்கு, இராதாபுரம் மேற்கு, இராதாபுரம் தெற்கு - பாளையங்கோட்டை வடக்கு, பாளையங்கோட்டை மத்திய, பாளையங்கோட்டை தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தென்காசி தெற்கு மாவட்டதிற்குட்பட்ட பாப்பாக்குடி ஒன்றியத்திலுள்ள 3 ஊராட்சிகள் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது, பாளையங்கோட்டை வடக்கு, பாளையங்கோட்டை மத்திய, பாளையங்கோட்டை தெற்கு ஆகிய ஒன்றியங்கள் மறுசீரமைக்கப்படுகின்றன. இராதாபுரம் கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியங்கள் மூன்று கழக ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கபட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

**சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றியம்:** அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாப்பாக்குடி ஒன்றியத்தில் உள்ள அத்தாளநல்லூர், அரிகேசவநல்லூர், திருப்புடைமருதூர் ஆகிய ஊராட்சிகள் புவியியல் அடிப்படையில் சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது. பாப்பாக்குடி ஒன்றியம் மீதமுள்ள 7 ஊராட்சிகளைக் கொண்டு தொடர்ந்து செயல்படும்.

**இராதாபுரம் கிழக்கு ஒன்றியம்:** 1. அப்புவிளை, 2. கரைச்சுத்து புதூர், 3. குமாரபுரம், 4. மகாதேவன்குளம், 5. ஆனைகுடி, 6. முதுமொத்தன்மொழி, 7. இடையன்குடி, 8. அணைக்கரை, 9. உறுமன்குளம் ஆகிய 9 ஊராட்சிகள் மற்றும் திசையன்விளை பேரூராட்சி.

**இராதாபுரம் மேற்கு ஒன்றியம்:** 1. கும்பிகுளம், 2. பரமேஸ்வரபுரம், 3. இராதாபுரம், 4. சமூகரெங்கபுரம், 5. சௌந்திரபாண்டியபுரம், 6. தெற்கு கள்ளிகுளம், 7. சிதம்பராபுரம், 8. கஸ்தூரிரெங்கபுரம், 9. கோட்டைகருங்குளம் ஆகிய 9 ஊராட்சிகள்.

**இராதாபுரம் தெற்கு ஒன்றியம்:** 1. கூடன்குளம், 2. கூத்தங்குழி, 3. திருவம்பலபுரம், 4. உதயத்தூர், 5. விஜயாபதி, 6. கரைச்சுத்து நவ்வலடி, 7. கரைச்சுத்து உவரி, 8. குட்டம், 9. உவரி ஆகிய 9 ஊராட்சிகள்.

**பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியம்:** 1. கீழநத்தம், 2. மணப்படைவீடு, 3. மேலப்பாட்டம், 4. மேலபுத்தனேரி, 5. நடுவக்குறிச்சி, 6. பாளையம்செட்டிகுளம், 7. திருமலைக்கொழுந்துபுரம், 8. உடையார்குளம், 9. ராமையன்பட்டி, 10. இராஜவல்லிபுரம் ஆகிய 10 ஊராட்சிகள்.

**பாளையங்கோட்டை மத்திய ஒன்றியம்:** 1. அரியகுளம், 2. கீழப்பாட்டம், 3. கான்சாபுரம், 4. திருவேங்கடநாதபுரம், 5. நொச்சிகுளம், 6. குன்னத்தூர், 7. மருதூர், 8. சீவலப்பேரி ஆகிய 8 ஊராட்சிகள்.

**பாளையங்கோட்டை தெற்கு ஒன்றியம்:** 1. முன்னீர்பள்ளம், 2. மேலத்திடியூர், 3. இட்டேரி, 4. கொங்கந்தான்பாறை, 5. செங்குளம், 6. முத்தூர், 7. ரெட்டியார்பட்டி, 8. பொன்னாக்குடி, 9. புதுக்குளம், 10. சிவந்திப்பட்டி, 11. தருவை, 12. திடியூர் ஆகிய 12 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற இராதாபுரம் கிழக்கு, இராதாபுரம் மேற்கு, இராதாபுரம் தெற்கு - பாளையங்கோட்டை வடக்கு, பாளையங்கோட்டை மத்திய, பாளையங்கோட்டை தெற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**இராதாபுரம் கிழக்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ்** திருநெல்வேலி மாவட்டம்.

**இராதாபுரம் மேற்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **எம்.ஜோசப் பெல்சி** திருநெல்வேலி மாவட்டம்.

**இராதாபுரம் தெற்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **க.எரிக் ஜீடு** திருநெல்வேலி மாவட்டம்.

**பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **எம். கண்ணன்** திருநெல்வேலி மாவட்டம்.

**பாளையங்கோட்டை மத்திய ஒன்றியம்** பொறுப்பாளர் : **எஸ். கணேசன்** திருநெல்வேலி மாவட்டம்.

**பாளையங்கோட்டை தெற்கு ஒன்றியம்** பொறுப்பாளர் : **கே.எஸ்.டி. சுபாஷ் சந்திரபோஸ்** திருநெல்வேலி மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரங்கள் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் மற்றும் திருநெல்வேலி மாநகரத்தில் உள்ள தச்சநல்லூர் வடக்கு,தச்சநல்லூர் தெற்கு,பாளையங்கோட்டை தெற்கு, பாளையங்கோட்டை வடக்கு, மேலப்பாளையம் மேற்கு,மேலப் பாளையம் கிழக்கு, நெல்லை-பேட்டை மேற்கு, நெல்லை-பேட்டை கிழக் குஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் மாநகர, பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரத்தை இரண்டாகவும், திருநெல்வேலி மாநகரத்தில் உள்ள 4 பகுதிகள் 8 பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட மாநகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாகவும், பகுதிகள் பின்வரும் வார்டுகளை கொண்டதாகவும் அமையும்.

**திருநெல்வேலி கிழக்கு மாநகரம்:** 1, 2, 3, 12, 13, 14, 15, 16, 17, 18, 19,20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28 ஆகிய 20 வார்டுகள்

**திருநெல்வேலி மேற்கு மாநகரம்:**4, 5, 6, 7, 8, 9, 10, 11, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41,42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55 ஆகிய 35 வார்டுகள்

**தச்சநல்லூர் வடக்கு பகுதி:** 1, 2, 3, 13, 14, 28 ஆகிய 6 வார்டுகள்

**தச்சநல்லூர் தெற்கு பகுதி**: 4, 10, 11, 12, 29, 30 ஆகிய 6 வார்டுகள்

**பாளையங்கோட்டை தெற்கு பகுதி:** 5, 6, 7, 8, 9, 34, 35 ஆகிய 7 வார்டுகள்

**பாளையங்கோட்டை வடக்கு பகுதி:** 32, 33, 36, 37, 38, 39, 55 ஆகிய 7 வார்டுகள்

**மேலப்பாளையம் மேற்கு பகுதி:** 43, 44, 45, 46, 47, 48, 49, 50 ஆகிய 8 வார்டுகள்

**மேலப்பாளையம் கிழக்கு பகுதி:** 31, 40, 41, 42, 51, 52, 53, 54 ஆகிய 8 வார்டுகள்

**நெல்லை - பேட்டை மேற்குபகுதி:** 17, 18, 19, 20, 21, 22 ஆகிய 6 வார்டுகள்

**நெல்லை - பேட்டை கிழக்கு பகுதி:** 15, 16, 23, 24, 25, 26, 27 ஆகிய 7 வார்டுகள்

**மாநகர கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற திருநெல்வேலிகிழக்கு, திருநெல்வேலிமேற்கு ஆகிய மாநகர கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, மாநகர கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருநெல்வேலிகிழக்கு மாநகர:** பொறுப்பாளர் : **சு. சுப்பிரமணியன்** திருநெல்வேலிமாவட்டம்.

**திருநெல்வேலி மேற்கு மாநகர:** பொறுப்பாளர் : **தினேஷ்** திருநெல்வேலிமாவட்டம்.

**பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட தச்சநல்லூர்வடக்கு, தச்சநல்லூர்தெற்கு, பாளையங்கோட்டைதெற்கு, பாளையங்கோட்டைவடக்கு, மேலப்பாளையம்மேற்கு, மேலப்பாளையம்கிழக்கு, நெல்லை - பேட்டைமேற்கு, நெல்லை - பேட்டைகிழக்குஆகிய பகுதிங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தச்சநல்லூர் வடக்கு பகுதி :** பொறுப்பாளர் : **Dr. S. சங்கர்குமார்** திருநெல்வேலி.

**தச்சநல்லூர் தெற்கு பகுதி:** பொறுப்பாளர் : **பூ.சுப்பிரமணியன்** திருநெல்வேலி.

**பாளையங்கோட்டைதெற்கு பகுதி :** பொறுப்பாளர் : **செய்யதுமுகைதீன்** திருநெல்வேலி.

**பாளையங்கோட்டை வடக்கு பகுதி :** பொறுப்பாளர் : **அ. செல்லத்துரை** திருநெல்வேலி.

**மேலப்பாளையம் மேற்கு பகுதி:** பொறுப்பாளர் : **S. சாகுல்ஹமீது** திருநெல்வேலி.

**மேலப்பாளையம் கிழக்கு பகுதி:** பொறுப்பாளர் : **சாமுவேல்** திருநெல்வேலி.

**நெல்லை - பேட்டை மேற்கு பகுதி:** பொறுப்பாளர் : **கா. சங்கர்** திருநெல்வேலி.

**நெல்லை - பேட்டை கிழக்கு பகுதி:** பொறுப்பாளர் : **இரா. நமச்சிவாயம் (எ) கோபி** திருநெல்வேலி.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.